

திருச்சி ஏடமலை பட்டியில் கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு அவர்கள் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரிக்க சென்றபோது அங்குள்ள பெண்கள் அனைவரும் ஒன்றாக திரண்டு வந்து எங்கள் வாக்கு உதயசூரியனுக்கே என்று மகிழ்ச்சி பொங்க, ஆரத்தி எடுத்து ஆரவாரத்துடன் கூறினர். அவருடன் மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன் மாவட்டத் துணைச் செயலாளர் முத்து செல்வம் விஜயா ஜெயராஜ், காஜாமலை விஜய் கிராப்பட்டி செல்வம், தொ.மு.ச. மாவட்ட அமைப்பாளர் குணசேகர், அருமைராஜ், சோழன், சம்பத், முத்து, பழனி, வழக்கறிஞர்கள் கவியரசன், ஷீலா, அந்தோணி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கவிதா உட்பட பலர் கலந்து கொண்டனர்.



அந்தியூர் சட்டமன்ற தொகுதி மதசார்பற்ற கூட்டணிக் கட்சிகளின் கழக வேட்பாளர் எம்.சிவபாலனை ஆதரித்து திராவிடர் கழகத் ஆசிரியர் கி.வீரமணி திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை எடுத்து கூறி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார். வாக்கு சேகரிப்பில் அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## தமிழகத்தின் உரிமைகளைப் பறிக்க நினைக்கும்

# பா.ஜ.க.வின் அரசியல் நாடகத்தை மக்கள் புரிந்துகொள்வார்கள்!

### புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை ஏப்.20–

நாடாளுமன்றத்தில் கொண்டு வந்த தொகுதி மறுவரையறை சட்ட மசோதா உள்ளிட்ட மூன்று சட்ட மசோதா தோல்வியடைந்தது குறித்து புதுக்கோட்டை கீழ இரண்டாம் வீதியில் உள்ள தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சரும் திருமயம் தொகுதி திமுக வேட்பாளருமான எஸ். ரகுபதி செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறுகையில்:

முதல் வெற்றியாகப் நாடாளுமன்றத்திலே வெற்றி கிடைத்திருக்கிறது. தொகுதி மறுசீரமைப்பு என்கின்ற பெயரிலே தமிழ்நாட்டின் உரிமைகளை நசுக்க நினைத்த பா.ஜ.க. கொண்டு வந்த தொகுதி மறுசீரமைப்பு சட்ட மசோதா நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு 352 வாக்குகள் இல்லை என்று தெரிந்தும் வேண்டுமென்றே பா.ஜ.க. இந்த சட்ட மசோதாவைக் கொண்டு வந்தது. மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டி அவர்களுக்கு வேண்டும். ஆனால் அவர்களுக்கு இருப்பது சிங்கிள் மெஜாரிட்டி தான். அதுவும் நிதிஷ் குமாரும், சந்திரபாபு நாயுடுவும் ஆதரிக்கிறதால் தான். அந்த சிங்கிள் மெஜாரிட்டி, இல்லாவிட்டால் ஆட்சியே கிடையாது.

எனவே மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டி தேவையான ஒரு சட்டத் திருத்த மசோதாவைக் கொண்டு வந்து அதன் மூலமாக ஏதாவது ஆதாயம் தேடலாமா என்று அவர்கள் பார்க்கிறார்கள். ஒன்று மட்டும் நிச்சயம், தமிழ்நாடு மக்கள் மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள மக்களும் பா.ஜ.க.வின் கபட நாடகத்தை நன்றாகப் புரிந்து கொள்வார்கள்.

தொகுதி மறுவரையறை என்பது வேறு, மகளிர் இடஒதுக்கீடு என்பது வேறு, இரண்டையும் சேர்த்து குழப்பி மக்களைக் குழப்புவதற்காகப் பார்த்தார்கள்.

நாம் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைச் சரியாக அமல்படுத்தி இருக்கிறோம். அதாவது அரசாங்கத்தினுடைய ஒரு சட்டத்தை அமல்படுத்தியதற்காகத் தென் மாநிலங்களுக்குத் தண்டனை தருகின்ற செயலை இன்றைக்கு ஒன்றிய அரசு செய்து வருகிறது.

1952லே நம்முடைய நாடாளுமன்ற இடங்கள் 42. இப்பொழுது நம்முடைய இடங்கள் 39. மக்கள் தொகை கட்டுப்பாட்டைக் குறைத்ததால் நமக்குக் கிடைத்திருக்கிற பரிசு, ஒன்றிய அரசு தந்திருக்கிற பரிசு.

இனிமேல் சட்டங்கள் போட்டால்



அதைக் கடைபிடிக்கக்கூடாது என்று ஒன்றிய அரசு புத்தி சொல்லியிருக்கிறது. எனவே எங்களைப் பொறுத்த வரைக்கும் நாங்கள் சரியான பாதையில் போய்க்கொண்டிருக்கின்றோம்.

தொகுதி மறு வரையறை வர வேண்டும், தொகுதி மறுவரை வர வேண்டும் என்பது எப்பொழுதுமே 20 ஆண்டுகளுக்கு ஒரு முறை செய்யப்பட வேண்டும். மக்கள் தொகை கணக்கெடுப்பை எடுத்துவிட்டு நீங்கள் செய்யுங்கள் என்றுதான் சொல்லுகிறோம்.

பல்வேறு கட்சிகள் மக்கள் தொகை கணக்கெடுப்பு எடுக்க வேண்டும், அதுவும் சாதிவாரி கணக்கெடுப்பு எடுக்க வேண்டும் என்கின்ற கோரிக்கையெல்லாம் வைத்திருக்கின்றன. எனவே நாங்கள் சாதிவாரி கணக்கெடுப்பை மக்கள் தொகை கணக்கெடுப்போடு சேர்த்து எடுக்க இந்திய அரசால்தான் முடியும்.

ஏனென்றால் இங்கே இருக்கக்கூடிய யாதவர்கள் பீகாரிலும் இருக்கிறார்கள், மற்ற மாநிலங்களிலும் இருக்கிறார்கள். அதேபோல இங்கே சேர்த்து இருக்கக்கூடிய நாயுடு போன்றவர்கள், ரெட்டியார் போன்றவர்கள், இவர்கள் எல்லாம் பிற மாநிலங்களிலும் இருக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அதேபோல 24 மனை தெலுங்குச் செட்டியார்களை எடுத்துக்கொண்டால் பல ஜாதியினர் ஒரு இரண்டு மூன்று மாநிலங்களில் இருக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அதேபோல பல மாநிலங்களில் இருக்கக்கூடியவர்களும் இருக்கிறார்கள். எனவே சாதிவாரி கணக்கெடுப்பு என்பது ஒன்றிய அரசு எடுத்தால்தான் சரியாக இருக்கும் என்பது எங்களுடைய நிலைப்பாடு. அதை நாங்கள் வலியுறுத்தினாலும் கூட, இன்றைக்கு மக்கள் தொகை கணக்கெடுப்பை எடுக்கப் போகிறோம் என்று சொல்கிறார்களே தவிர அதற்கான நடவடிக்கைகளை எடுக்காமல் தொகுதி மறுவரை, தொகுதி சீரமைப்பு என்கின்ற பெயரிலே மகளிர் மசோதாவை இடையிலே புகுத்தி அதன் மூலமாக எதிர்க்கட்சிகளுக்கு ஏதாவது கெட்ட பெயரை வாங்கித் தந்துவிட முடியுமா என்று ஒரு தப்பு கணக்கை இன்றைக்கு பா.ஜ.க. போட்டிருக்கிறது.

நிச்சயமாக நாங்கள் மகளிர் இட ஒதுக்கீட்டுக்கு எதிரிகள் அல்ல. ஆனால் மூன்றில் ஒரு பங்கு மகளிருக்குக் கொடுப்பதிலே திமுக உள்ளிட்ட எந்தக் கட்சிக்கும் எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. அதை ஒழுங்காகக் கணக்கெடுப்பு நடத்திக் கொடுங்கள் என்றுதான் கேட்கிறோம். அதே நேரத்தில் மக்கள் தொகைக் கட்டுப்பாட்டை அதாவது குடும்பக் கட்டுப்பாட்டை அமல்படுத்தியதற்காக எங்களுக்குத் தண்டனை தரக்கூடாது. அன்றைக்கு இருந்த நிலவரப்படிதான் தரவேண்டும். இல்லையென்றால் இனி எதிர்காலத்திலே ஒன்றிய அரசு கொண்டு வரும் எந்தச் சட்டத்தையும் யாருமே மதிக்க மாட்டார்கள். நம்ம சட்டத்தை மதித்தால் பாதிப்பு நமக்குத் தான் என்கின்ற உணர்வு அவர்களுக்கு வந்துவிடும். எனவேதான் இதை எதிர்த்து இன்றைக்கு வாக்களித்து அதன் மூலமாக அந்த சட்ட மசோதாவை நியாயப்படி முறியடித்திருக்கிறோம். இந்திய மக்களுடைய நலனிலே அக்கறை கொண்டு எங்களுடைய தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இந்த நடவடிக்கையை முன்னெடுத்திருக்கிறார்.

எடப்பாடிக்கு இப்ப என்ன பேசுறது, எது பேசுறதுன்னே ஒன்னும் தெரியல. எப்ப பாரு தூங்காமலே பேசிக்கொண்டே போறாரு. பஸ்ல போகும்போது கூட தூங்காம இருக்காருன்னு நினைக்கிறேன். அதனால அவர் வந்து என்ன சொன்னாலும் அது உளறல். எடப்பாடியினுடைய உளறல்களுக்கெல்லாம் நம்ம பதிலளிக்க வேண்டியதில்லை. பெண்களுக்கு இட ஒதுக்கீட்டை கொண்டு வந்தது தி.மு.க. எனவே நாங்கள் வந்து என்றைக்குமே பெண்களுக்கு துரோகம் செய்யவே மாட்டோம். ஏன்னா பெண் வாக்காளர்கள் தான் எங்களுடைய இன்றைக்கு வாக்கு வங்கி. அந்த வாக்கு வங்கியில் கையவைப்பதற்காக இப்படி ஒரு சதிச்செயலை அவர்கள் செய்தாலும் கூட தமிழ்நாட்டு மக்கள் நிச்சயமாக, பெண்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், நம்ப மாட்டார்கள். இந்த சட்டத்தை அவசரமாக கொண்டு வந்ததின் நோக்கமே தேர்தல் நடக்கிற நேரத்திலே இந்த சட்டத்தை கொண்டு வரவேண்டிய அவசியமே கிடையாது.

ஆனால் அவசரமாக கொண்டு வந்ததே இந்த தேர்தல் நடக்கிற மாநிலங்களில் இருக்கக்கூடிய கட்சிகள், அது கேரளாவா இருந்தா அது கேரளா முடிஞ்சு போச்சு. தமிழ்நாட்டுக்கு ஏதாவது ஒரு பிரச்சனையை கிளப்பி விடலாமா என்கின்ற கண்ணோட்டத்திலே அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். எந்த பிரச்சனையும் அவர்கள் கிளப்ப முடியாது. ஏனென்றால் நாங்கள் ஆரம்பத்திலேயே எதிர்த்து குரல் கொடுத்து, கருப்புக்கொடி ஏந்தி எல்லாரும் அதை எதிர்க்க வேண்டும், தமிழ்நாட்டு மக்கள் ஒட்டுமொத்தமாக எதிர்க்க வேண்டும், இது தமிழ்நாட்டுக்கு பாதிப்பு என்று குரல் எழுப்பிருக்கிறோம். எனவே எங்களை வந்து தமிழ்நாட்டு மக்களிடமிருந்து எங்களை பிரிக்க முடியாது, எங்கள் தலைவரை பிரிக்க முடியாது.

59 தொகுதிகள் என்று அதை எழுத்துப்பூர்வமாக எழுதியே தரலையே. சொல்றது வாயால அமித்ஷா வாயால சொல்றது என்றைக்காவது செஞ்சிருக்காரா? வாயால வடை சுட்டுட்டு போய்டுவாரு, ஏமாத்திடுவாரு. அவர் வந்து இட ஒதுக்கீடு மசோதாவால் தென் மாநிலங்களுக்கு பாதிப்பு வராது என்று இங்க வந்து சொல்லுவார். உத்தரப்பிரதேசத்துல போயி அல்லது பீகார்ல போயி இட ஒதுக்கீடு வந்து உங்களுக்கு சாதகமா இருக்குன்னு சொல்லுவார். அதனால் அவர் இடத்துக்கு தகுந்தாற்போல் பேசுகின்றவர்கள் நாங்கள் அல்ல. அது ஒரு பச்சோந்தித்தனம். அங்கங்க நிறம் மாறுறது. நாங்கள் நிறம் மாறுகின்றவர்கள் அல்ல. நாங்கள் எப்போதுமே ஒரே நிறத்தில், ஒரே கருத்தில், ஒரே நிலைப்பாடு கொண்டவர்கள்.

அமித்ஷாவின் பேச்சைக் கேட்டு எடப்பாடி பழனிச்சாமி சொல்வது என்பது தான் கொத்தடிமை, எழுதி கொடுத்தாச்சு சாசனம். அவரைப் பத்தி பிரச்சனை இல்லை. அ.தி.மு.க. இன்றைக்கு தங்களுடைய டெபாசிட்டை காப்பாற்றிக் கொள்வதற்கு வேண்டிய முயற்சிகளை அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

59 தொகுதிகள் என்று எழுதி தரட்டும் அப்புறம் பார்ப்போம். அத்தைக்கு மீசை முளைக்கட்டும், அப்புறம் சித்தப்பான்னு கூப்பிடலாம் என்று அமைச்சர் தெரிவித்தார்.

## தமிழ்நாட்டில் அ.தி.மு.க.வை முற்றிலுமாக அழித்து விட்டது பா.ஜ.க.!

### பா.ஜ.க. – ஆர்.எஸ்.எஸ். சேர்ந்து தமிழ்நாடு, தமிழ்மொழி மீது தாக்குதல் நடத்துகின்றது!

# பா.ஜ.க.வின் சதித்திட்டத்தை நாடாளுமன்றத்தில் முறியடித்துள்ளோம்!

### பொன்னேரியில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் ராகுல்காந்தி கடும் தாக்கு!

திருவள்ளூர், ஏப்.20–

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தேர்தல் பொதுக்கூட்டத்தில் ராகுல் காந்தி பங்கேற்று பேசியதாவது:-

தமிழ்நாட்டு மக்களோடு எனவு உறவு மேம்பட்டு இருக்கிறது .

எனது இதயத்தில் தமிழ்நாட்டு மக்களுக்கு தனி இடம் உள்ளது.

நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவத்தை குறைக்க வேண்டும் என்பதுதான் பாஜகவின் முக்கிய நோக்கமாக உள்ளது. பாஜகவின் சதித்திட்டத்தை நாடாளுமன்றத்தில் நேற்று முறியடித்துள்ளோம் .

பாஜகவின் தொகுதி மறுவரையறை மசோதாவை



எதிர்க்கட்சியினர் ஒன்றிணைந்து முறியடித்தோம். மகளிர் இடஒதுக்கீடு என்ற பெயரில் தொகுதி மறுவரையறை மசோதாவை தாக்கல் செய்தனர்.

பாஜகவும், ஆர்எஸ்எஸ் அமைப்பும் இந்தியாவின் பன்முகத்தன்மையை சீர்குலைக்க முயற்சிக்கின் றன. தமிழ் மொழி, தமிழர்களின் கலாச்சாரம், தமிழின் வரலாற்றை பாஜகவினர் அழிக்க முயற்சிக்கின்றனர்.

தமிழ்நாட்டை டெல்லியிலிருந்து ஆள வேண்டும் என்பதுதான் பாஜகவின் நோக்கம் ; அதற்கு ஒருபோதும் இடம்கொடுக்கக் கூடாது

பாஜகவும், ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் தமிழினத்திற்கு எதிரானவர்கள்.

பாஜகஆர்எஸ்எஸ் சதித்திட்டங்களை திமுகவும், கூட்டணிக் கட்சிகளும் முறியடித்து வருகின்றன.

சட்டமன்றத் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக் குக் கூட்டணி வேட்பாளர்கள் அனைவரும் வெற்றி பெற வேண்டும்.

மோடி, அமித்ஷா உத்தரவை செயல்படுத்தும் ஒருவரை தமிழ்நாட்டின் முதலமைச்சராக்க பாஜக நினைக்கிறது.

தமிழ்நாட்டின் எதிர்காலத்தை டெல்லிதான் தீர்மானிக்கவேண்டும் என்று பிரதமர் மோடி விரும்புகிறார்.

தமிழர்கள் யார் என்பதை பாஜக புரிந்து கொள்ளவில்லை.


டிரம்பிடம் மோடி சரணடைந்தது போல், டெல்லியிடம் சரணடையும் முதலமைச்சர் வேண்டும் என்று பாஜக விரும்புகிறது.

தமிழ்நாட்டில் அ.தி.மு.க.வை முற்றிலுமாக அழித்து விட்டது பா.ஜ.க.

தற்போதுள்ள அ.தி.முக. என்பது பாஜகவின் முகமூடி.

சமூகநீதி கொள்கைகள் மற்றும் பெரியாரின் சித்தாந்தங்களை பாஜக அழிக்க முயற்சிக்கிறது.

இவ்வாறு ராகுல் காந்தி பேசுகையில் குறிப்பிட்டார்.



திருச்சி தெற்கு மாவட்டம் கூத்தைபார் பேரூர் கழகச் செயலாளர் எம்.ஆர்.டி.பி. தங்கவேல் மகன் திருமணத்தை தலைமையேற்று மாவட்ட கழகச் செயலாளரும் பள்ளிகல்வித் துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி நடத்தி வைத்து மணமக்கள் சிவக்குமார் – ஜோதிகா இணையரை வாழ்த்தினார் . உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.என். சேகரன், ஒன்றியச் செயலாளர் கே.எஸ்.எம். கருணாநிதி, மயில் பெரியசாமி, கழக நிர்வாகிகளும் தொண்டர்களும் கலந்து கொண்டனர்.


சென்னை சிந்தனையாளர் மன்றம்

சார்பில்

மாபெரும் கருத்தரங்கம்

நாள்: 20.04.2026 திங்கட்கிழமை நேரம்: மாலை 6.00 மணி

இடம்: முத்தமிழ்ப் பேரவை, திருவாவடுதுறை டி.என்.இராஜரத்தினம் கலையரங்கம், ஆர்.ஏ.புரம், (சத்யா ஸ்டுடியோ எதிரில்), சென்னை - 600 028.

வரவேற்புரை : குணாநிதி அமிர்தம்
துணைத்தலைவர், முத்தமிழ்ப் பேரவை

தலைமை : விஜயா தாயன்பன்
ஒருங்கிணைப்பாளர், சென்னை சிந்தனையாளர் மன்றம்

தொகுதி மறுவரையறை

பெரிய வெற்றி தமிழ்நாட்டுக்கு!

பெருந்தோல்வி ஒன்றிய அரசுக்கு!!

ஏன்? எப்படி?

DELIMITATION

Big Win for Tamil Nadu!

Defeat for Union Government !!

HOW? AND WHY?

கருத்துரையாளர்கள்:

திருமிகு ஆ.இராசா எம்.பி. அவர்கள்
துணை பொதுச்செயலாளர், தி.மு.க.

திருமிகு. என்.ராம் அவர்கள்
இயக்குநர், தி இந்து குழுமம்

அனைவரும் வருக!




கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதி, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வேட்பாளர், வி.செந்தில்பாலாஜி கெம்பட்டி பகுதி, செல்வபுரம் சாலை பகுதியில் பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் பகுதிக் கழகப் பொறுப்பாளர் என்.ஜே. முருகேசன் உள்பட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.